# மே - 08 - திங்கள்

## புனித குயின்டின்

### “இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று”– திபா 42:3

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 11 : 1 – 18**

அக்காலத்தில் பிற இனத்தவரும் கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொண்டதைப் பற்றித் திருத்தூதர்களும் யூதேயாவிலுள்ள சகோதரர் சகோதரிகளும் கேள்விப் பட்டார்கள். பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, விருத்த சேதனம் செய்துகொண்டவர்கள் ”அவரோடு வாதிட்டனர். ”நீர் ஏன் விருத்தசேதனம் செய்து கொள்ளாதோரிடம் சென்று அவர்களுடன் உணவு உண்டீர்?” என்று குறை கூறினர். பேதுரு நடந்தவற்றை ஒன்றன்பின் ஒன்றாக விளக்கிக் கூறத் தொடங்கினார். ”நான் யோப்பா நகரில் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தபோது மெய்ம்மறந்த நிலையில் ஒரு காட்சி கண்டேன். பெரிய கப்பற்பாயைப் போன்ற ஒரு விரிப்பு நான்கு முனைகளிலும் கட்டப்பட்டு வானத்திலிருந்து இறக்கப்பட்டு என்னிடம் வந்தது. அதை நான் கவனமாக நோக்கியபோது, தரையில் நடப்பன, ஊர்வன, வானில் பறப்பன, காட்டு விலங்குகள் ஆகியவற்றைக் கண்டேன். ”பேதுரு, எழுந்திடு! இவற்றைக் கொன்று சாப்பிடு” என்னும் ஒரு குரல் ஒலிப்பதையும் கேட்டேன். அதற்கு நான், ”வேண்டவே வேண்டாம் ஆண்டவரே, தீட்டானதும் தூய்மையற்ற துமான எதுவும் ஒருபோதும் என் வாய்க்குள் சென்றதில்லை” என்றேன். இரண்டாம் முறையும் வானிலிருந்து மறுமொழியாக, ”தூய்மையானது எனக் கடவுள் கருதுவதை தீட்டாகக் கருதாதே” என்று அக்குரல் ஒலித்தது. இப்படி மும்முறை நடந்தபின்பு யாவும் வானத்துக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டன. அந்நேரத்தில் செசரியாவிலிருந்து என்னிடம் அனுப்பப்பட்ட மூவர் நான் தங்கியிருந்த வீட்டின் முன் வந்து நின்றனர். தூய ஆவியார் என்னிடம், ”தயக்கம் எதுமின்றி அவர்களோடு செல்” என்று கூறினார். உடனே நானும் இந்த ஆறு சகோதரர்களுமாக அந்த மனிதர் வீட்டுக்குச் சென்றோம். அவர் தம் வீட்டில் வானதூதர் வந்து நின்றதைக் கண்டதாகவும், அத்தூதர் பேதுரு என்னும் பெயர் கொண்ட சீமோனை வரவழையும் நீரும் உம்வீட்டார் அனைவரும் மீட்புப் பெறுவதற்கான வார்த்தைகளை அவர் உம்மோடு பேசுவார் என்று தமக்குக் கூறியதாகவும் எங்களுக்கு அறிவித்தார். நான் பேசத் தொடங்கியதும் தூய ஆவி முதலில் நம்மீது இறங்கி வந்தது போல் அவர்கள் மீதும் இறங்கி வந்தது. அப்போது, ”யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார் ஆனால் நீங்கள் தூய ஆவியால் திருமுழுக்குப்பெறுவீர்கள்” என்ற ஆண்டவரின் வார்த்தைகளை நான் நினைவு கூர்ந்தேன். இப்போதும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டபோது நமக்கு அருளப்பட்ட அதே கொடையைக் கடவுள் அவர்களுக்கும் கொடுத்தார் என்றால் கடவுளைத் தடுக்க நான் யார்?” என்றார். இவற்றைக் கேட்டு அவர்கள் அமைதி அடைந்தனர் வாழ்வுக்கு வழியான மனம்மாற்றத்தைப் பிற இனத்தவருக்கும் கடவுள் கொடுத்தார் என்று கூறி அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

**பதில்பாடல் :** உயிருள்ள இறைவன் மீது என் நெஞ்சம் தாகம் கொண்டுள்ளது

**நற்செய்தி : யோவான் 10 : 11-18**

அக்காலத்தில் இயேசு கூறியது: நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார். ”கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப்போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல. ஆடுகள் அவருக்குச் சொந்தமும் அல்ல. ஓநாய் ஆடுகளைப் பற்றி இழுத்துக்கொண்டு போய் மந்தையைச் சிதறடிக்கும். கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப்பற்றி கவலை இல்லை. நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார் நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன் என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன். இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்லவேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவி சாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஓரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும். தந்தை என்மீது அன்பு செலுத்துகிறார். ஏனெனில் நான் என் உயிரைக் கொடுக்கிறேன் அதை மீண்டும் பெற்றுக்கொள்ளவே கொடுக்கிறேன். என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன். உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதிகாரம் உண்டு. என் தந்தையின் கட்டளைப்படியே நான் இப்படிச் செய்கிறேன்” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் நல்லாயன் இயேசுவை சந்திக்கும் நாம் அவரது மந்தையில் இணைந்து நற்செய்திக்குச் சாட்சிகளாக வாழ அழைக்கப்படுகின்றோம். அதேபோன்று நல்லாயனான இயேசுவும் எம் ஒவ்வொருவரையும் தமது மந்தையில் சேர்த்து நற்செய்திக்குச் சாட்சிகளாக்க விரும்புகின்றார் என்ற உண்மை தெளிவு படுத்தப்படுகின்றது. இன்றைய முதல் வாசகத்தில் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட புனித பேதுரு எமது வாழ்வின் மூலைக்கல் ஆண்டவர் இயேசு எனவும், ஆண்டவர் இயேசு என்னும் பரிசுத்த நாமத்தைத் தவிர வேறு எந்த நாமத்தாலும் மீட்பு இல்லை எனவும், நல்ல ஆயன் ஆண்டவர் இயேசுவோடு நாம் எவ்வாறு ஒன்றித்திருக்க வேண்டுமெனவும் திட்டவட்டமாக கூறுகின்றார். அதேபோன்றே இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசுவும் நல்ல ஆயனான தமக்கும், பிதாவிற்கும் இடையேயுள்ள உறவின் தன்மையை “நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கின்றார். நானும் தந்தையை அறிந்திருக்கிறேன்” என நாம் தம்மிலே இணைந்திருக்க வேண்டுமென்று தெளிவுபடுத்துகின்றார். இறைமகன் இயேசு இவ்வுலகில் தமது போதனையின் காலத்தில் தாம் எவ்வாறு எம்மீது இரக்கமாக இருக்கின்றார் என்பதனை பலவிதத்தினில் எமக்கு விளக்கிக்காட்ட முனைந்திருக்கின்றார். எனவே நல்லாயன் இயேசு சுட்டிக்காட்டிய விடுதலையின் பாதையில் எமக்கு முன் வழி நடந்த திருச்சீடர்கள், புனிதர்கள் போன்று நாமும் “என் ஆடுகள் என்னை அறிந்திருக்கின்றன” என விசுவசித்து வாழுகின்றோமா? அல்லது அவரது கொட்டிலைச் சேராத வேறு ஆடுகளாக நாம் வழிதவறி அலைவது மட்டுமல்லாது, அடுத்தவர்களையும் தடுமாறி வாழ வழி வகுக்கின்றோமா?